


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 356 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 20 – சனிக்கிழமை 05 ஆகஸ்ட் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 356: Thiruvalluvar Year - 2054 - Aadi 20 - Saturday 05 August 2023 - Chennai 16 Pages ₹ 5.00

### கர்நாடக அணைகளில் 80 சதவிகிதம் நீர் இருந்தும் நான்கில் ஒரு பகுதிதான் திறந்துள்ளனர் - எனவே

# டெல்டா மாவட்ட விவசாயிகளை காப்பாற்றுங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமரிடம் முறையீடு!

**சென்னை, ஆக. 5-**

**கர்நாடகா அணைகளில் 80 சதவிகித அளவிற்கு தண்ணீர் இருந்தும், தமிழ்நாட்டிற்கு நான்கில் ஒரு பகுதிதான் திறந்துவிட்டுள்ளனர். எனவே டெல்டா மாவட்ட விவசாயிகளை காப்பாற்றுங்கள். காவிரியில் உரிய நீரை தமிழ்நாட்டிற்குத் திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிடுங்கள் என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில், காவிரி டெல்டா பகுதிகளில், குறுவை சாகுபடிக்காகக் காத்திருக்கும் நெற்பயிரைக் காப்பாற்றுவதில் காவிரி டெல்டா விவசாயிகள் எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையை எடுத்துரைத்து, காவிரியிலிருந்து உரிய நீரினைத் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு கோரி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2023) கடிதம் எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில், முதல்வர் அவர்கள், இந்தியாவின் பிற பகுதிகளைப் போல் அல்லாமல், தமிழ்நாடு, குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகள், தென்மேற்குப் பருவமழையின் போது மிகக் குறைவான மழைப்பொழிவைப் பெறுவதாகவும், குறுவை சாகுபடியும், சம்பா நெல் விதைப்பும், மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரை, குறிப்பாக கர்நாடகாவிலிருந்து வரும் நீரை மட்டுமே சார்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மாதாந்திர அட்டவணைப்படி, பிலிகுண்டுலுவில், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நீரின் பங்கை உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ளதாகவும், துரதிர்ஷ்டவசமாக, இந்த உத்தரவை கர்நாடகம் முழுமையாக மதிக்கவில்லை என்றும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதல்களையும் கடைப்பிடிக்கவில்லை என்றும் கவலையுடன் குறிப்பிட்டுள்ளார்.

2023-2024 ஆம் ஆண்டில், 2023 ஜூன் 1 முதல் ஜூலை 31 வரை கர்நாடகாவிலிருந்து பிலிகுண்டுலுவிற்கு 40.4 டி.எம்.சி. தண்ணீர் வந்து சேர வேண்டிய நிலையில், 11.6 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே வந்துள்ளதாகவும், கர்நாடகாவில், 4 முக்கிய நீர்த்தேக்கங்களின் முழு கொள்ளளவான 114.6 டி.எம்.சி.யில், 91 டி.எம்.சி அளவிற்கு மொத்த நீர் இருப்பு தற்போது உள்ள போதிலும், கர்நாடக அரசு 28.8 டி.எம்.சி அளவிற்கு பற்றாக்குறையாக தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்து விட்டுள்ளது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் புள்ளி விவரங்களுடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

காவிரி டெல்டாவின் உயிர்நாடியாக விளங்கும் மேட்டூர் அணையில், 2023, ஆகஸ்ட் 2 ஆம் நாளன்று நிலவரப்படி, 26.6 டி.எம்.சி. அளவிற்கு மட்டுமே தண்ணீர் உள்ளதாகவும், இது குடிநீர் மற்றும் இதர அத்தியாவசியத் தேவைகளுக்கு 15 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், குறுவை நெற்பயிர் முதிர்ச்சியடைந்து, அதிக மகசூல் பெற, இன்னும், 45 நாட்கள் தண்ணீர் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஆபத்தான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களிடம் கடந்த ஜூலை 5 மற்றும் 19 தேதிகளில் இப்பிரச்சினையை எடுத்துச் சென்று, உச்ச நீதிமன்றம் நிர்ணயித்த விநியோக அட்டவணையைக் கடைப்பிடிக்க கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறும், இதனை முறையாகக் கண்காணிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தினை அறிவுறுத்துமாறும் வலியுறுத்தியதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இருப்பினும், கர்நாடக அரசு இவற்றைக் கருத்தில் கொள்ளாமல், முழுமையாக நிரம்பிய கபினி அணையில் இருந்து மட்டுமே தண்ணீரைத் திறந்து விட்டதாகவும், கர்நாடகாவின் முக்கிய நீர்த்தேக்கங்கள் 80 விழுக்காடு அளவிற்கு நிரம்பியுள்ள சூழ்நிலையிலும், அவற்றிற்குத் தொடர்ந்து நல்ல நீர்வரத்து உள்ள சூழ்நிலையிலும், அந்த நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் ஏதும் திறக்கப்படவில்லை என்றும் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா, மாநிலத்தின் நெல் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்வதாகவும், ஏற்கெனவே அரிசித் தட்டுப்பாட்டால், பாசுமதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு தடை விதித்துள்ள தற்போதைய சூழலில், காவிரி டெல்டாவில் தற்போது உள்ள குறுவை நெல் பயிரையும், தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உடனடியாகத் தலையிட்டுக் காப்பாற்ற வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதோடு, உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ளபடி, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாகத் திறந்து விடவும், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ஏற்பட்ட பற்றாக்குறையைத் தீர்க்கவும் கர்நாடக அரசுக்கு இந்தியப் பிரதமர் அவர்கள் உரிய அறிவுரைகளை வழங்குவதோடு, இதனை உறுதி செய்வதற்குத் தேவையான அறிவுரைகளை ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்திற்கும் வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### அவதூறு வழக்கில்

## ராகுல்காந்திக்கு வழங்கப்பட்ட தண்டனைக்குத் தடை!

### உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

**புதுடெல்லி, ஆக. 5-**

**அவதூறு வழக்கில் ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு தடைவிதித்து, உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனால் அவர் மீண்டும் எம்.பி. ஆகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.**

*ராகுல்காந்தி தேர்தல் பிரச்சாரத்தில் பேசியது குறித்த கிரிமினல் அவதூறு வழக்கில், அவருக்கு குஜராத் மாநிலத்தின் சூரத் நீதிமன்றம் 2 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. தண்டனையை எதிர்த்து, ராகுல்காந்தி சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு, நீதிபதிகள் பி.ஆர்.கவாய், நரசிம்மா, சஞ்சய் கிஷன் கவுல் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.*



*அப்போது, ராகுல்காந்திக்கு வழங்கப்பட்ட தண்டனையால் தேர்தலில் நிற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டி ராகுல் தரப்பு வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி வாதிட்டார்.*

*அப்போது, “ராகுல்காந்திக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச தண்டனையால் ஒரு எம்.பி மட்டுமல்ல, ஒரு தொகுதி மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். அவருக்கு ஓராண்டு 11 மாதங்கள் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் தகுதிநீக்கம் செய்யப்பட்டிருக்கமாட்டார்” என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.*

*மேலும், “அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட்டது ஏன்?” என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.*

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### அறிவித்த திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் பயன்பாட்டுக்கு வருவதுதான்

# நாம் நிர்வாக ரீதியாக நடத்திக்காட்டும் சாதனை!

## முன்னுரிமை திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, ஆக.5–

அறிவித்த திட்டங்கள் அரசு ஆணைகளாகி குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்பாட்டிற்கு வந்தால் அதுதான் நாம் நிர்வாக ரீதியாக நடத்திக் காட்டும் சாதனை என்று தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னுரிமை திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (4.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னுரிமை திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**பருவமழை தொடங்குவதற்கு முன்பு பணிகளை முடித்திட வேண்டும்!**

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், திட்டங்கள் எல்லாம் நன்றாக நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான், இதுபோன்ற ஆய்வுகளை தொடர்ந்து நடத்தி வருவதாக தெரிவித்தார். மேலும், களஆய்விற்கு செல்லும் போது சில இடங்களில் பணிகள் முழுமையாக முடியாத நிலை இருப்பதை சுட்டிக்காட்டி, வடகிழக்குப் பருவமழை துவங்குவதற்கு முன்பாக பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, பணிகள் முன்னேற்றம் குறித்து பார்வையிட அமைக்கப்பட்டுள்ள டேஸ்போர்டில் தகவல்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

அதேபோன்று பணிகளின் முன்னேற்றம் குறித்த புகைப்படங்களையும் வாரந்தோறும் பதிவேற்றம் செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டால் அது எவ்வளவு வேகமாக செயல்பாட்டிற்கு வருகிறது என்பதுதான் முக்கியம்.

எனவே, தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் துறை செயலாளர்கள் கலந்தாலோசித்து உடனுக்குடன் திட்டத்தை செயல்படுத்திட வேண்டும் என்றும், அறிவிக்கப்பட்ட திட்டம் தாமதமானால் அதற்கான மதிப்பீடுகள் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திட்டங்களை நிறைவேற்றும் அதிகாரிகளை அழைத்துப் பாராட்டுங்கள் என்றும், அறிவித்த திட்டங்கள் அரசு ஆணைகளாகி குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்பாட்டிற்கு வந்தால் அதுதான் நாம் நிர்வாக ரீதியாக நடத்திக் காட்டும் சாதனையாகும் என்று தெரிவித்து, அந்த சாதனையை நிறைவேற்ற அரசு செயலாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**திட்டங்களை முழுமூச்சுடன் நிறைவேற்றிடுக!**

முன்னுரிமைத் திட்டங்களை முழுமூச்சுடன் நிறைவேற்றி தமிழ்நாட்டு மக்களுக்கு அத்திட்டங்களின் பயன்களை கொண்டு போய்ச் சேர்த்திட வேண்டும் என்று துறைச் செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

---

### மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்டது!

## அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இயற்கைச் சந்தை!

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தகவல்!

*சென்னை, ஆக. 5-*

*தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகர பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாதமும் மாத முதல் வார சனி, ஞாயிறு மற்றும் மாதத்தின் மூன்றாம் வார சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் இயற்கை சந்தை (Natural Bazaar) நடத்திடப்படவுள்ளது. இம்மாத இயற்கை சந்தை எதிர்வரும் 05.08.2023 (சனிக்கிழமை) மற்றும் 06.08.2023 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.*

*இந்த இயற்கை சந்தையில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக்குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசிகள், சிறுதானிய மற்றும் சிறுதானிய மதிப்புக் கூட்டுப்பொருட்கள், காய்கறிகள் மற்றும் கீரைகள், பனை ஓலை பொருட்கள் போன்ற இயற்கையுடன் சார்ந்த பொருட்கள் கிடைக்கும்.*

*மேலும் இயற்கை சந்தையில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் தயார் செய்யப்படும் பல்சுவை உணவுப் பொருட்கள் கிடைக்கும்.*

*எனவே பொதுமக்கள் அனைவரும் இயற்கை சந்தையை பார்வையிட்டு மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை வாங்கி மகிழ தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.*